RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt224s-22250

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# திருத்தொண்டர் புராணத்தில் வழிபாடு

**ச. சகுந்தலை [அ, *]**

[அ] தமிழ்த்துறை, பூ.சா.கோ. கலை அறிவியல், கோயம்புத்தூர்-641014, தமிழ்நாடு, இந்தியா

# Worship in Thiruthondar Puraanam

**S. Sakunthalai [a, *]**

[a] Department of Tamil, P.S.G. College of Arts and Science, Coimbatore-641014, Tamil Nadu, India

* Corresponding Author: sakunthalai.tamil@gmail.com

Received: 27.09.2022
Revised: 29-10-2022
Accepted: 04-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Worship helps with the growth of love and the maintenance of morality. The Scriptures show that the devotees were very much involved in this way of worship. In this country, worship is the background that guides the establishment of religion and culture. It is an ancient custom to carry water with a flower and worship it. That is the dharma of Thirumarai. Worship is not only going to a temple and worshipping God with folded hands but also worshipping him with body, mind, feeling, and speech. It is important to understand through the Thiruthondar Puranam how the Nayanmars followed the rules of worship and benefited from them. In this age of urgency, it becomes an important necessity for people to realize and follow the simple code of worship associated with life.

**Keywords:** worship, Thiruthondar Puranam, Nayanmars, Thirumarai,

## முன்னுரை

திருத்தொண்டத் தொகை- வித்து திருத்தொண்டர் அந்தாதி- செடி திருத்தொண்டர் புராணம் - மகாவிருட்சம். இம்மகா விருட்சமாகிய திருத்தொண்டர் புராணத்தில், அடியார் பெருமக்கள் திருத்தலங்களுக்கு கால்நடையாக நடந்து சென்று, எவ்வாறெல்லாம் பணிகள் செய்து, வழிபாடு செய்திருக்கின்றனர் என்பதை உணர்தல் அவசியமாகும். ஆலயங்களில், மாசுக்குரிய செயல்களை மாற்றி, மாண்புக்கு உரியதாக்குவதே வழிபாட்டின் அடிப்படை. திருத்தலங்களில் அடியார்கள், அன்பால், மலரால், வேள்வியால், பாடலால், இசையால், விழாவால், உள்ளத்தால் உணர்ந்து வழிபட, இறைவன் ஊன் நைந்துருக உவகைகள் தருவார் என்பதை திருத் தொண்டர்கள் வரலாற்றால் அறியலாம். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் எனக் கூறிய அவ்வைத்தாய், உடன்பாட்டு முகத்தால் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று அருளினார். வழிபாட்டால், ஒற்றுமை, பிறருக்கு உதவுதல், அடியார்களுடன் பழகுதல், அருள் உணர்வு ஆகியன வளர்ந்து மனித வாழ்வைப் புனித வாழ்வாக மலர வழிவகுக்கும் என்பது உறுதி. வழிபாட்டு நெறிகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியனவற்றை எவ்வாறு கடைபிடித்துப் பயன்பெறுவது என்பதனைத் திருத்தொண்டர் புராணம் வாயிலாகச் சிந்தித்து உணர்ந்து, செயல்படுத்தி பயன் பெறுவோம் என்பது தெள்ளத் தெளிவு.

## வழிபாட்டு நெறிகள்

"விரும்பும் சரியை முதல் மெய்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய் கனி போன அன்றோ பராபரமே"

என்று தாயுமானவர் பாடியருளியுள்ளார்.

சரியை அரும்பு போன்றது என்றும், கிரியை மலர் போன்றது என்றும், யோகம் காய் போன்றது என்றும், ஞானம் கனி போன்றது என்றும், இந்நெறிகளுக்கு உவமை கூறுகின்றார்.

“சரியை என்பது இறைவனுடைய திருஉருநோக்கிச் செய்யும் வழிபாடு ஆகும். கிரியை என்பது புறத் தொழில் மாத்திரையானே முதல்வனது அருவுருவத் திருமேனியை நோக்கி செய்யும் வழிபாடு. யோகம் என்பது கரணங்களை சிவார்ப்பணம் செய்து ஆறாதாரங்களில் அகத்தொழிலால் தியானித்தல் ஆகும். ஞானம் என்பது கேட்டல், சிந்தித்தல் முதலியன".

## வழிபாட்டு நெறி




இவ்வழிபாட்டு நெறிமுறைகளுக்கு உதாரணமாக நால்வரையும் மேற்கண்டவாறு போற்றுவர். இன்னெறி முறைகளை பின்பற்றுவதற்கு கிடைக்கும் பழங்களாக முறையே சாலோகம் சாமிபம் சாரூபம் சாயுச்சியம் என் மனவற்றை கூறுவர்.

"சாலோகம் என்பது ஒரே உலகம் அதாவது இறைவனது உலகத்தை அல்லது இறைவன் இருக்கும் இடத்தை அடைதல். சாமீபம் என்பது இறைவனுக்கு அண்மையை அடைதல். சாருபம் என்பது ஒரே ரூபம் அதாவது இறைவனது ரூபத்தை பெறுதல் சாயுச்சியம் எனப்படுவது இறைவரோடு இரண்டறக் கலக்கும் நிலை" என்றவாறு விளக்குகின்றார் (Santhalinga Ramasamy Adigalar, 2015).

## சரியை

சரியை என்பது இறைவன் திருமேனியைத் தொடாமல் உடம்பு கொண்டு செய்கின்ற இறைவனுக்குரிய மெய்த் தொண்டாகும். இதனைத் தாசமார்க்கம் என்று கூறுவர். இன்னெறியின் அங்கங்களாக அலகிடுதல் முதலான தொண்டுகளும் இறைவனை வழிபடும் முறைகளும் அமைந்துள்ளன. இந்நெறி பற்றி திருஞானசம்பந்தர் தேவாரத் திருமுறைப் பாடல்களால் அறியலாம் (Velayutham, 1963). திருஞானசம்பந்தர் சரியை நெறியை

“பண்ணிலாவும் பாடலினான் இறை சேரும் வளை அங்கைப்
பெண்ணிலாவ உடையான் பெரியார் கழல் என்றும் தொழுதேத்த
உள்நிலாவியவர் சிந்தையுள் நீங்கா ஒருவன் இடம் என்பர்
மண்ணிலாவும் அடியார்க்கு அடிமைத் தொழில் மல்கும் புகலூரே” (1 : 2 : 3)

எனப் பாடியருளியுள்ளார்.

## சரியையின் தொண்டுகளும் வழிபாட்டு முறைகளும்

திருநாவுக்கரசர் சரியைத் தொண்டுகள் எவை எவை எனக் குறிப்பிட்டுப் பின்வருமாறு பாடியருளுகின்றார்.

“நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா

நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்

புலர்வதன் முன் அலகிட்டுமெழுக்குமிட்டுப்

பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடி

தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா

சய போற்றி போற்றி என்றும்

அலை புனல் சேர் செஞ்சடை எம் ஆதி என்றும்

ஆரூரா என்றென்றே அலறா நில்லே”(6 : 31 : 3 )

எனப் பாடியருளியதிலிருந்து சரியைத் தொண்டுகள் உடம்பு கொண்டு செய்யப்படுவது என்பது புலனாகிறது. இதனை அருநந்திசிவாச்சாரியாரும் தாச மார்க்கம் சாற்றில் சங்கரன்தன் கோயில் தலம் அலகிட்டு இலகு திருமெழுக்கும் சாத்திப் போதுகளும் கொய்து பூந்தார் மாலை கண்ணி புனிதர்க்குப் பல சமைத்துப் புகழ்ந்து பாடித் தீதில் திருவிளக்கிட்டுத் திருநந்தவனமும் செய்து என்ற பாடலில் சரியை நெறி தொண்டுகள் சுட்டப்பட்டுள்ளன (Vellaivaarananaar, 1972).

### சரியை வழிபாடுகளாவன

புகழ்ந்து பாடுதல், வணங்குதல், வலம் வருதல், கூத்தாடுதல், நாமம் கூறி போற்றிசைத்தல், கூட்டு வழிபாடு செய்தல், இறைவன் நாமம் கேட்டல் என்பன இறைவனைப் புகழ்ந்து பாடுவோர்,"கோழை முதலான காரணத்தால் உங்கள் குரலில் இனிமை இல்லை என்றாலும், பாட்டு எழுத்து பிழை இல்லாமல் படிக்க முடியாவிட்டாலும், இசை பழக்கம் என்பதே இல்லை என்றாலும், அயர்ந்து விடாதீர்கள் வந்த வரைக்கும் பாடுங்கள் தொழுங்கள்" அன்போடு கூறும் அடியார் சொற்களை கனிவோடு மகிழ்ந்து கேட்கின்றார் சிவபெருமான் (Velayutham, 1963). ஆகையால், தமிழ் வேத பாடல்கள் பாடி, வணங்கி, உய்ய வேண்டும்.

## தமிழ் மொழி வழிபாடு

வடமொழி வேதங்களை ஓதாது உணர்ந்த திருஞானசம்பந்தர், சிரபுர நகரில் எழுந்தருளியுள்ள பெருமானை வழிபட தமிழ் மொழியைக் கொண்டேன் என்று திருஞானசம்பந்தர் அருளியுள்ளார். "தமிழாய் இறைவன் இருக்கின்றார் எனில், தமிழ் என்றால் சிவம் என்று பொருள். முதன் முதல் இம்மாபெரும் உண்மையை வெளிப்படுத்தியவர் திருஞானசம்பந்தர் பெருமானே ஆவார்". (Saravana Muthaliyar, 1959).

### வணங்குதல்

வணங்குதல் என்பது மூன்று வகையாக சொல்லப்படுகிறது அவை 1. திரையங்க நமஸ்காரம் - இரு கை கூப்பித் தலை தாழ்த்தி வணங்குதல். 2. பஞ்சாங்க நமஸ்காரம்-ஐந்து உறுப்புகளும் நிலம் தோய வணங்குதல். 3. அட்டாங்க நமஸ்காரம்-எட்டு உறுப்புகளும் நிலம் தோய வணங்குதல். அடியார்கள் இம்மூ வகையாலும் இறைவனைப் பணிந்து வணங்குவர்.

“மாதவர் தேவரோடும் சிரமெடுத்துக் கைகள் கூப்பும் சிரபுரம்” (1: 47 :5)

என்ற பாடல் வரிகள் திரையங்க நமஸ்காரம் செய்யப்பட்டமையை உணர்த்துகின்றன. நலம் பெறுதல் திருக்கோயிலின் உள்ளே திருச்சிற்றில் வலம் வருதலும் திருக்கோவிலுக்கு வெளியே வீதியில் வலம் வருதலும் மலை வளம் வருதலும் என வலம் பெறுதல் பல வகைப்படும் வலம் வரும் போது பாடல் பாடி வலம் வரும் வழக்கமும் உண்டு என்பதை

"வள்ளல் இருந்த மலையதனை வலம் செய்தல் வாய்மை" (3 :100 : 08 )

என திருஞானசம்பந்தர் பாடி அருளியமையால் தெரிய வருகின்றன. திருநாவுக்கரசரும்

"தலையே நீ வணங்காய் தலை மாலை தலைக்கணிந்து

தலையாலே பலி தேரும் தலைவனை தலையே நீ வணங்காய்"

எனத் தொடங்கி, கண்கள் இறைவனின் திருநடனம் காணவும், செவிகள் இறைவனின் திருநாமங்களை கேட்கவும், மூக்கானது இறைவனின் அருட்கருணை மனத்தினை நுகரவும், வாய் ஆனது இறைவனின் பெருமைகளைப் பாடிப் பரவவும், நெஞ்சானது எந்நேரம் ஆதியும் அந்தம் இல்லா இறைவனை நினைத்துக் கொண்டே இருக்கவும், கைகள் இறைவனுக்குத் தொண்டு செய்து அவனை வணங்கவும், கால்கள் ஆனது இறைவன் உறைகின்ற திருக்கோயிலை வலம் வந்து வணங்கவும், திருவருள் துணைநிற்க வேண்டும் என்று திருஅங்க மாலைப் பதிகத்தில் குறிப்பிடுகின்றார்.

## கூத்தாடுதல்

அன்பு மேலிட்டு தன் வசம் இழந்து பரவசமாய்க் கூத்தாடுதலும் ஒரு வழிபாட்டு முறையாகும்.

"பாடி ஆடிப் பரவுவார்" (1 :28 :7)

"பண்ணிய நடத்தோடு இசை பாடும் அடியார்கள்" (2 :33 :2 )

"கல்ல வடமிட்டுத் திசை தொழுதுஆடியும் பாடுவார்" ( 3 :9:6 )

எனத் திருஞானசம்பந்தர் பாடுகின்றார். இதன் மூலம் அடியார்கள் பாடிக்கொண்டாடுவதும் ஆடுவோர் நிருத்தர் என அழைக்கப்பட்டதும், மலையாள நாட்டில் இருந்து தமிழகத்தில் குடியேறியவர் திருப்பழுவூரில் கூத்தாடியதும், கல்லவடம் என்ற இசைக் கருவியை இயக்கிக் கூத்தாடியதும் தெரிய வருகின்றன.

## நாமம் கூறிப் போற்றிசைத்தல்

மணமானது வேறு எல்லாவித உறவுகளையும் மறந்து, இறைவனை மட்டும் நினைந்து உருகி நாமம் கூறி வழிபடுதல் ஒரு வகை. இந்நிலையைத் திருநாவுக்கரசர் தன்னுடைய பதிகத்தில் முழுமையாக இறைவனைச் சார்ந்து அனைத்தும் அவனாகவே மாறிப் போய்விட்ட தன்மையைப் பாடியருளுகின்றார். இறைவனது நாமங்களை வடமொழியாலும், தமிழ் மொழியாலும் எடுத்துரைத்து வழிபடுவது வழக்கம்.

"சய சய என மிகு துதி செய" (1 :20 :09)

"நாதா எனவும், நக்கா எனவும் நம்பா என நின்று பாதம் தொழுவார்" (1:67:1)

என திருஞானசம்பந்தர் பாடி அருளுகின்றார் இதிலிருந்து இறைவனது திருநாமங்களை தமிழ்ச் சொற்கள் போற்றி ஓதி வழிபட்டமை தெரிய வருகின்றன. இறை நாமம் கேட்டல் இறைவன் நாமத்தைக் கூறுதல் அன்றி கேட்டலும் ஒரு வழிபாடாகும் திருநாவுக்கரசர் பாடிய அருளிய திருஅங்கமாலை பதிகத்தில் 'செவிகாள் கேண்மின்களோ'என்று குறிப்பிட்டார்.

"அரன் நாமம் கேளாய் நம் கிளை கிளைக்கும்" (1: 62 :1)

"புகழ் நாமம் செவி கேட்ப" (2. :41 :3)

'சொல்லுதல் கேட்டல் வல்லார் துன்பம் துடைப்பாரே' (1:42 :6)

"சொல்லுவார்க்கும் இவை கேட்பார்க்கும் துயரில்லையே" (2 :116 :11)

இப்பதிகங்களை ஓதுகின்றவர்களுக்கு மட்டுமின்றிக் கேட்டார்க்கும் கூடப் பலன் உண்டு என்பதனைக் குறிப்பிட்டருளியுள்ளதுதனிச்சிறப்பு.

## கூட்டு வழிபாடு

தனி ஒருவராக வழிபடுதலோடு பலர் ஒன்று கூடி வழிபடுவது கூட்டு வழிபாடு. இதனைத் திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

"பல தொண்டர் கூடிப் புலர் காலையே அடிகள் ஆரத் தொழுதேத்த" (2. :118 :1)

என வரும் பாடல் வரிகளால் அடியார்களுக்கு கூடி இரு வேலையும் வழிபட்டமை தெரிய வருகிறது. பிறர் நலன் வேண்டி தொழும் பொழுது, அதுவும் ஒரே நோக்கில் ஒன்றினையே நினைத்து அனைவரும் பாடும்போது, இறையாற்றல், வேண்டியனவற்றைக் கொடுத்தருளும் என்பது சமய நம்பிக்கை.

## கிரியை நெறி

இறைவனை நெருங்கி நின்று இறைத்தூறும் மேனிகளைத் தொட்டுச் செய்யும் அடிமை தொண்டு கிரியை நெறியாகும் இது சர்ப்புத்திர மார்க்கம் என்று கூறப்படும் மலர் புகை ஒழி மஞ்சளப் பொருட்கள் திருஅமுது முதலியவற்றை முன்னதாக திரட்டி கொள்ள வேண்டும் பஞ்ச சக்திகள் செய்ய வேண்டும் ஆசனம் மூர்த்தி மூலம் ஆகிய மந்திரங்கள் முறையே இறைவனுக்கு ஆசனம் இட்டு அதன் மேல் மூர்த்தியை வைத்து அதன் உள்ளே மூர்த்தியான சிவஜோதியை எழுந்தருளிக்க வேண்டும் தூய அன்பு கொண்டு அபிஷேகம் அலங்காரம் தூபதீபம் காட்டல் நிவேதனம் படைத்தல் ஆகிய செயல்களால் பூசித்து துதிக்க வேண்டும். இறுதியில் வேள்வி செய்தல் வேண்டும் என அருணந்தி சிவாச்சாரியார் குறிப்பிடுகின்றார். கிரியையின் அங்கங்களாக மலர் தூவல், மலரும் நீரும் தூவல், திருமஞ்சனம் செய்தல், அலங்கரித்தல், புகை காட்டல், தீபம் காட்டல், அவிப்படைத்தல், உபச்சாரங்கள் செய்தல், துதி பாடல் முதலியனவாகும்.

## மலர் தூவல்

கைகளில் சிறிதளவு மலர் கொண்டு போய் இறைத் திருமேனியின் திருமுடியில் அல்லது திருவடிகளில் மலர்களை தூவி கைகூப்பி வணங்குவது மலர் தூவும் வழிபாடாகும். இது கிரியை நெறியில் மிகவும் எளிய வழிபாட்டு முறையாகும். வண்டு வந்து பூவில் அமர்ந்து தேன் உண்பதன் முன் மலர் பறித்துச் சாத்த வேண்டும் மலரில்லாத போது அன்போடு பச்சிலை சாத்தியும் வழிபடலாம்.

"யாவர்க்குமாம் இறைவருக்கு ஒரு பச்சிலை

யாவருக்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை

யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி

யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே" (Manikam, 2004).

என்னும் இப்பாடல் வழி இறைவனுக்கு அன்பாக மலர் வைத்து வழிபடுங்கள் மலர் இல்லை எனில், பச்சிலையை அன்பாக வைத்து வழிபட வேண்டும் என்று திருமூலர் குறிப்பிடுகின்றார்.

## மலரும் நீரும் தூவல்

"கொய்து பத்தர் மலரும் புனலும் கொடுத்து தூவித் துதி செய்து" (1:2:10)

என திருஞானசம்பந்தர் பாடியருளியதிலிருந்து, சிறிது நீர் தெளித்து, மலர்களைத் தூவி வழிபாடு செய்வது தெரிய வருகிறது.

## நெய் (எண்ணெய்) பால், தயிர்

இறைவனுக்கு தொன்று தொட்டு எண்ணெய் அபிசேகம் செய்தல் மரபு.

"ஆடினாய் நறு நெய்யோடு பால் தயிர்" (3 : 1: 1)

"பாலோடு நெய் தயிர் பலவும் ஆடுவர்" (3 : 15 :3)

என்ற திருஞானசம்பந்தர் பாடல்களால், இறைவனுக்கு எண்ணெய், பால், தயிர் அபிஷேகம் செய்யப்பெறுவதைஅறியலாம்.

## தேன், இளநீர், கருப்பஞ்சாறு, பழச்சாறு

தேனும், இளநீரும், கருப்பஞ்சாறும், பழச்சாறும், இறைவனுக்கு அபிசேகம் செய்யப்பட்ட வழக்கத்தைத் திருஞானசம்பந்தர்,

"தேன், நெய், பால், தயிர், தெங்கிளநீர் கரும்பின் தெளி"(2 :6 : 5)

"பாலினால் நறுநெய்யால் பழத்தினால் பயின்று ஆட்டி" (1 : 61 : 5)

என்ற வரிகளில், குறிப்பிட்டருளுகின்றார்.

## பஞ்சகவ்வியம்

பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்னும் ஐந்தையும், குறிப்பிட்ட விகிதத்தில் கலந்து எடுப்பது பஞ்சகவ்யம் ஆகும். இது ஆனைந்து எனப்படுகிறது.

"ஆனைந்து ஆடும் முடியானும்

ஐயாறுடைய ஐயனே" (2 : 6 : 5)

என்ற திருஞானசம்பந்தர் பாடலால் அறியலாம்.

## அலங்காரம், தூபம், தீபம்

அபிஷேகம் செய்த பிறகு ஆடை அணிவித்து சந்தனப் பொட்டு இட்டு ஆபரணங்களும் மலர்மாலைகளும் சாத்துதல் அலங்காரமாகும். அலங்காரம் நிறைவு பெற்றவுடன் புகை காட்டுதலும் ஒளி காட்டுதலும் தூப தீப வழிபாடு செய்தல் தொடர்ந்து நடைபெறும் மரபாகும். அலங்காரம் நிறைவு பெற்றவுடன் புகை காட்டுதல் ஒளி காட்டுதல் அதாவது தூபதீபம் காட்டுதல் ஒன்றன்பின் ஒன்றாக தொடர்ந்து நடைபெறும் மரபு ஆகும்.

“மலர் தூவி” (2 : 33 : 3)

எனத் திருஞானசம்பந்தர் பாடியருளியுள்ளார். குங்குலிய கலியநாயனார், இறைவனுக்கு தூபம் காட்டுவதை தம் குறிக்கோளாககொண்டு இறைவனை அடைந்தார் என்பது வரலாறு.

## நிவேதனம் (அவி காட்டுதல்), உபசாரம்

"திருந்து புகையும் அவியும் பாட்டும் நம்பும் பெருமை நள்ளாறு" (1 :7 : 5)

எனத் திருஞானசம்பந்தர் பாடி அருளியதிலிருந்து இக்கிரியை நெறியை அறியலாம். இறைவனுக்கு கண்ணாடி காட்டுதல், ***கவரி** வீசுதல்*, குடைபிடித்தல், விசிறியால் விசிறுதல் முதலியன

உபச்சாரங்களில் அடங்கும். பின் இறைவன் முன் கீதம் பாடுதல், வாத்தியம் வாசித்தல் போன்றனவும் உபச்சாரங்களாகும்.

"காலையொடு துந்துபிகள் சங்கு குழல் யாழ் முழவு

கா மருலவு மாலை வழிபாடு செய்து" (3 : 72 : 3 )

என திருஞானசம்பந்தர் பாடியதிலிருந்து இறைவன் முன் ஆடுகின்ற நிருத்தம், பாடுகிற கீதம், துந்துபி முதலிய கருவிகள் ஒலிப்பித்தல் முதலியனவும் உபசாரங்கள் ஆகின்றன.

## துதி பாடுதல்

துதி பாடுதல் சரியையிலும் கிரியையிலும் வரும். பூஜா காலம் அல்லாத நேரத்தில் சரியையாளர் இறைவன் முன் தோத்திரம் பாடுவது சரியை நெறியில் அடங்கும். இறைவனைப் பூசிக்கும் போது, தூப, தீப, நைவைத்தியங்கள் நிறைவு செய்த பிறகு, இறைவன் மீது அப்பூசை புரிவோர், துதி பாடுவது கிரியையில் அடங்கும்.

## அடியார்களின் வழிபாடு

திருக்கோயில்களில் அடியார்கள் பூசித்தமையைத் திருஞானசம்பந்தர்,

"தூவித் தொழுதேத்தும் ஞாலம் புகழ் அடியார்" (1 : 15 :9)

எனப் போற்றுகின்றார். குங்குலிய கலியநாயனார், வரலாற்றில் இறைவன் துண்டுக்காக தாலியையும் பெற்று குங்கிலியம் வாங்கியது இவரது அன்பின் பக்தியை நிலை நாட்டுகின்றது. திருப்பனந்தாள் கோயிலில் தாடகை என்னும் பெண் புத்திர பேற்றை விரும்பி அங்கு இறைவனை வழிபட்டு வந்தார் ஒருநாள் இறைவனுக்கு மாலை சாத்தும் போது ஆடை நிகழ்ந்தது அதனை இரண்டு முழங்கைகளினாலும் பற்றி கொண்டு மாலை சாத்த முடியாமல் வருந்தினாள் அப்போது இறைவன் திருமுடி சாய்த்து மாலையை ஏற்றுக்கொண்டார். அன்று முதல் இறைவன் சாய்ந்த வடிவமாக எழுந்தருளி இருக்கின்றார் என்பது தல வரலாறு. இதிலிருந்து பெண்கள் கற்ப கிரகத்துக்குள் சென்று வழிபடலாம் என்ற செய்தியை நாம் அறிய முடிகிறது. மேலும் திருநீலநக்க நாயனார் துணைவியார் இருவரும் கருவறைக்குச் சென்று சாத்தமங்கையில் உள்ள அயவந்தி ஆலயத்தில் பூசனை செய்திருக்கின்றார்கள். அப்பொழுது இறைவன் மீது விசத்தன்மையுள்ள சிலந்தி வீழ்ந்தது உடனே துணைவியார் அப்பூச்சியை அகற்ற வாயால் ஊதினார். உடனே வெறுப்புடன் திருநீலநக்கர், மனைவியை ஒதுக்கி வைத்தார் என்ற வரலாற்றைப் பார்க்கின்றோம். இதிலிருந்தும் பெண் அடியார்களும் இறைவன் கருவறைக்குச் சென்று பூசித்திருக்கின்றார்கள் என்ற செய்தியையும் அறிய முடிகிறது.

## யோக நெறி

யோகம் என்ற சொல் ஒன்று சேர்த்தல் எனப் பொருள்படும் அதாவது ஆன்மாவை கடவுளோடு ஒன்று சேர்த்தல் என்பதாகும். ஆக ஆன்மாவை கடவுளோடு ஒன்றுவதற்கு எட்டு படிமுறைகள் யோக நெறி வழிபாட்டில் பேசப்படுகின்றன இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாகும். **இயமம்**: அற நூல்களில் கூறப்படும் அறச்செயல்களை மேற்கொள்வது இயமம் இவை அனைவருக்கும் பொதுவானவை. **நியமம்**: தானே வரையறுத்துக் கொள்ளும் உறுதிகள் நியமம் ஆகும். **ஆசனம்**: மனத்தை அசையாமல் ஒரு நெறிப்படுத்துவதற்கு உதவியாக உடம்பையும் அசையாமல் ஒருநிலைப்படுத்தி அமரும் நிலை ஆசனம் ஆகும். **பிராணாயாமம்**: பிராண வாயுவை ஒருநிலைப்படுத்துதல் பிராணாயாமம். **தியானம்**: அலைபாயும் மனதை ஒருமுகப்படுத்துதல் தியானம் எனப்படும். இதனைத் திருநாவுக்கரசர் ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை என்று குறிப்பிட்டார்.

## சமாதி

ஆன்மாவை இறைவனோடு ஒன்றுபடுத்துதல் சமாதியாகும். அதாவது இறைவனை மட்டும் சிந்தித்துக் கொண்டு இருத்தல் ஆகும். அட்டாங்க யோகப் பயிற்சியால் அட்ட சித்திகள் கைகூடும். யோகியர் யோக சாதனையால் அட்ட சித்திகளைப் பெற்ற நிலையில் "சித்தர்கள்" எனப்படுவர்.

அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன அட்டமா சித்திகளாகும். அணிமா - அணு போன்று சூக்குமமாதல், மகிமா - மலை போன்று பெரிதாதல், கரிமா - பளு மிகவாதல், இலகிமா - பஞ்சு போல் மென்மையாதல், பிராப்தி - எல்லா பொருளையும் தருவித்தல், பிரகாமியம் - விருப்பம் போல் இன்பங்களைப் பெறுதல், ஈசத்துவம் - தான் விரும்பியவாறு பிறவற்றை நடத்துதல், வசித்துவம் - தத்துவங்களில் கலந்து நிற்றல்.

இங்ஙனம் யோக நெறி பற்றிய செய்திகள் திருமந்திரம் முதலான நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு யோக நெறியில் நிற்பவர்கள் சாரூப பதவி பெறுவார்கள் என்பது சைவ சமய உண்மையாகும்.

## ஞானநெறி

வீடு பேறு அடைய உதவும் நான்கு வகை வழிபாடுகளில், நான்காவதாகக் கூறப்படுவது ஞான நெறி வழிபாடு. "ஞானம் ஈசன் பால் அன்பே" என்பர் சான்றோர். இதனை ஞானம் உண்டார் என்று சேக்கிழார் பெருமான் கூறுகின்றார். சிவனடியில் கலக்கும் சாயுச்சியம் பேற்றைத் தரவல்லது இந்த ஞான நெறி. இந்நெறிவழிபாடு கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கைகூடல் என நான்கு வகைப்படும். இந்நெறி நிற்பவர் தொடக்கத்தில் செய்யும் ஞான பூஜையானது ஞான நூல்களை ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல் என்று ஐந்து வகைப்படும் என்று மெய் கண்ட சாத்திரங்கள் விளக்கம் அளிக்கின்றன. ஐந்து எழுத்து எல்லா மந்திரங்களுக்கும் முதன்மையான மந்திரம் என்று அறிவுறுத்தித் திருஞானசம்பந்தர் பஞ்சாக்கரப் பதிகத்தை பாடுகின்றார். அதற்கு மேல் ஒரு மந்திரம் இல்லை என்பது தெளிவு. ஞான நெறி வழிபாடு செய்பவர்கள் சிவனடியை பெறும் சாயுச்சியப் பேறு பெறுவர். எனவே அன்பே ஞானம் ஞானமே அன்பு என்பது புலனாகின்றது.

## முடிவுரை

நாட்டில் சமயநெறியும், பண்பாடும் நிலை பெற வழிபாட்டு நெறிகள் அவசியமாகிறது. 63 நாயன்மார்களில் மங்கையர்க்குத் திலகமாய்த் திகழும் மங்கையர்க்கரசியார், தாம் அரசியாய் இருந்தும், ஒவ்வொரு நாளும் திருக்கோயிலுக்குச் சென்று புலர்வதன் முன் அலகிட்டு, மெழுகுமிட்டு, பாமாலை புனைந்து ஏத்திப் பணிகளைச் செய்து, வழிபாடு செய்தருளியுள்ளார் என்பதைப் பெரியபுராணம் காட்டுகின்றது. திருப்பனந்தாளிலுள்ள இறைவனைத் தாடகை என்னும் பெண் வழிபாடு செய்து வந்தார். நாளும் நீரிட்டு, மலரிட்டு, வழிபடும் அவள், மலர் மாலை சாத்த முற்படும் போது, உடுத்தியிருந்த உடை நெகிழ்ந்தது. உடை நெகிழ்ந்ததால் மாலையினை கீழே போட்டால் அன்பு வழிபாட்டில் குறை உண்டாகும் எனக் கருதி தனது முழங்கையால், நெகிழ்ந்த ஆடையை இடுக்கிக்கொண்டு செய்வதறியாது நிற்கும்போது, இறைவன் சிவலிங்க வடிவத்தில் அம் மாலையை தலைசாய்த்து ஏற்றுக்கொண்டார் என்ற வரலாற்றைத் திருத்தொண்டர் புராணத்தில் பார்க்கும் பொழுது கருவறை சென்று மகளிரும் வழிபாடு செய்திருக்கின்றனர் என்பதை உணர முடிகிறது. கிரியை தொண்டுகள் பலவாயினும், இறைத் திருமேனியை தொட்டுப் பூசித்து வழிபடுதல் ஆகிய திருநெறியும், பாடிப் பரவித் துதி பாடுதல் நெறியும் கடைபிடிக்க தக்க வழிபாட்டு நெறிகள் ஆகும். யாவருக்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை என்ற திருமூலர் அருளியபடி அன்போடு இறைவனை வழிபட்டு அனைத்து நலங்களையும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வோம்.

## References

Manikam, A. (2004) Thirumanthiram, Varthaman Pathippagam, Chennai, India

Santhalinga Ramasamy Adigalar, (2015) Tamil Neri Katturaikal, Kumarathevar Pathippagam, Coimbatore, India

Saravana Muthaliyar, (1959) Katturai Polil, Paari Nilayam, Chennai, India

Velayutham, K. (1963) Thirugnanasambandar Varalaru, Karur Sivanerikazhagam, Chennai, India.

Vellaivaarananaar, K. (1972) Panniru Thirumurai Varalaru, Annamalai University, Chidambaram, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License